DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - CMP.No.476 /2025

Miscellaneous -

Sessions -

Deposition of witness for Defence PW4

Name : Rani

Father Name /
Husband Name : Muthu

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 15th October 2025.

நான் ஆலங்குப்பத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கோட்டக்கரையில் உள்ள 2 1/2 ஏக்கர் எனது ஆயாவுக்கு சொந்தமான நிலத்தை ஆதியிலிருந்து நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். திடீரென்று ஒருநாள் நாங்கள் கொல்லிக்கு செல்லும்போது ஆரோவில்லைச் சேர்ந்த வெள்ளைக்காரர்கள் எங்கள் இடத்தில் வேலி கட்டி கொண்டிருந்தார்கள். ஏன் வேலி கட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு எங்கள் மாமா பச்சையப்பன் இந்த நிலத்தை அவர்களிடம் விற்று விட்டதாக சொன்னார்கள்.

அவர்கள் எங்களை ஆள் வைத்து துரத்தியதால் வீட்டிற்கு வந்து விட்டோம். அதன்பின்னர் ஆரோவில்லில் உள்ள அலுவலகத்திற்கு சென்று மீண்டும் கேட்டோம்.

ஆனால் அவர்கள் சரிவர பதில் சொல்லாமல் நிலத்தை விற்றுவிட்டதால் கோர்ட்டுக்கு சென்று பார்த்துக்கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள்.

ஆரம்பத்திலிருந்து தற்போது வரை அந்த நிலம் எங்கள் பராமரிப்பில் தான் இருந்து வருகிறது. அந்த நிலத்தில் கம்பு வேர்கடலை போன்ற பயிர்கள் வைத்து அனுபவித்து வருகிறோம். எனவே எதிரிகள் மீது தக்க நடவடிக்கை எடுத்து அந்த நிலத்தை மீட்டு தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

(ஓம்)/- XXXX,

நீதித்துறை நடுவர்,
வானூர்.